மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) சிறப்பான வகையில் தயாரிக்கப்பட்ட மூன்று பேருந்துகள் பின்னர் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்த்து பொருட்காட்சியைச் சுற்றிப் பார்க்கும் பேருந்துகளாக ஓட்டப் பட்டன. அந்தப் பேருந்துகள் 5—3—68 அன்று பதிவு செய்யப்பட்டன.

(இ) 1967 ஜூன் முதல் செப்டம்பர் வரையில் அரசுச் சின்னமின்றி ஐம்பத்தி இரண்டு பேருந்துகள் ஓட்டப்பட்டன. பேருந்துகளின் பக்கத்தில் சின்னத்தை பொறிப்பதற்கு தேவையான ஒட்டுப்படத்தாள் அப்போது இல்லாத காரணத்தால் பேருந்துகள் அரசுச் சின்னமின்றி ஓட்டப்பட்டன.

Housing Board Quarters

* 259 Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the names of the Members of Legislature to whom the houses of the Housing Board were let for rent from 1st March 1967 to 30th September 1967 ?

வீட்டுவசதி வாரிய வீடுகள்.

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினு விற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

1967-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1967-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை சட்டமன்ற அங்கத்தினர்கள் யார் யாருக்கு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை. ஆனல், திரு. சோம சுந்தரம் என்ற எம்.எல்.ஏ.க்கு 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18-ம் தேதி முதல் 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி வரைக்கும் வீடு கொடுக்கப்பட்டு 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி காலி செய்யப்பட்டது. திரு. அறிவழகன் எம்.எல்.சி.க்கு 1967-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் வருடம் மே மாதம் 9-ம் தேதி வரை யில் வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு வீட்டைக் காலி செய்தார். திரு. கொளத்தூர் கோதண்டம் என்பவருக்கு 1968-ம் வருடம் மே மாதம் 1-ம் தேதியில் கொடுக்கப்பட்டு இருந்து வருகிறார். திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களுக்கு 1968-ம் வருடம் ஜனவரி மாதம் 24-ம் தேதி முதல் கொடுக்கப்பட்டு இருந்து வருகிறார்.

திரு. சி. பி. சிற்றரசு : சென்னையில் வீடு இருக்கிற அங்கத்தினர்களுக்கு விடுதிகளில் இடம் கொடுப்பதுண்டா ? அப்படிக் கொடுத்திருந்தால் யார் யாருக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : எம்.எல்.ஏ.க்களுக்குத் தான் இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தவிர மற்றவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை. ஆனல் பப்ளிக் கோட்டாவில் பொது மக்களுக்கு கொடுக்கப் படுகிற வீடுகளில் அவர்களுக்கு எல்லாவிதமான உரிமையும் கொடுப்பதற்கு உண்டு.

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு : வீட்டு வசதி வாரியத்தினல் கொடுக்கப்படும் இந்த வீடுகளுக்கு வாடகை எவ்வளவு நிர்ணயிக்கப்படுகிறது? யாரால் நிர்ணயிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : சேர்மன், ஸ்டேட் ஹவுசிங் போர்டு.

27th March 1969]

திரு. சி. பி. சிற்றரசு : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, சென்னை நகரத்தில் குடியிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வீடுகளில் இடம் கொடுப்பதுண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனால் Economic rent என்றிருப்பதால் மற்ற கட்டிடங்களுக்கு என்ன வாடகை இருக்கிறதோ, அந்த வாடகை கொடுப்பதாக இருந்தால் அது கவனிக்கப்படும்.

MR. CHAIRMAN : Question 260 is postponed.

UNSTARRED QUESTIONS.

சென்னை தீ விபத்து நிதி

1 வினா.—திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) புதிய அரசு பதவியேற்ற பின் பொதுமக்களிடமிருந்து மாவட்ட வாரியாக நன்கொடையாக வசூலான தீ விபத்து நிதி எவ்வளவு ?

(இ) வேறு ஏதேனும் நிதிகள் வசூலிக்கப்பட்டதா ?

A.—(*i*) The total contribution received up to 12th November 1968 for the Madras City Fire Relief Fund is Rs. 38,22,300·78. Districtwise figures are not available.

(*ii*) The total contribution in respect of Chief Minister's State Relief Fund upto 12th November 1968 is Rs. 3,94,462·76.

ரம்ஜான் பண்டிகை தானம்

2 வினா.—திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) இராமநாதபுரம் மாவட்ட கிழக்கரையில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு ஒரு முதலாளி இல்லத்தில் இனாம் பெற முயற்சித்த 6 பேர் நசுக்குண்டு இறந்தனரா ?

(இ) அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

A.—(*a*) Yes.

(*b*) Alms giving is a regular feature during Ramzan and hitherto Police bandobust was not asked for and provided. However, the Sub-Inspector of Police and the Inspector of Police who failed to take adequate action to regulate the crowd in the instant case were dealt with and awarded a reprimand each. Wide publicity has also now been given to the effect that alms should not be distributed without Police bandobust.

மதுரை அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள் சங்கம்

3 வினா.— திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) மதுரை அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள் விடுத்த கோரிக் கைகள் யாவை ?

(இ) அவை மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?